# பத்மனாபபுரம் நகராட்சி

பத்மனாபபுரம் நகர் மன்றத்தின் சாதாரண கூட்டம் 2020–ம் வருடம் செப்டம்பர் மாதம் 24–ம் தேதி வியாழக் கிழமை காலை 11.30 மணிக்கு நகராட்சி அலுவலகத்தில் வைத்து நடைபெற்ற கூட்ட நடவடிக்கைகள் விபரம் மற்றும் அக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மான விவரங்கள் பின்வருமாறு.

## பொருட்கள்

1)அரசாணை எண்.174, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதுறை, நாள்.24.11.2015. மற்றும் அரசாணை எண்.40, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதுறை, நாள்.21.04.2017. படி இரணியல் பேரூராட்சி மற்றும் 319 ஊரக குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டம் மற்றும் கூட்டுக் குடிநீர் திட்ட மேம்படுத்தல் திட்டத்தின் கீழ் பத்மனாபபுரம் நகராட்சி மற்றும் காட்டாத்துறை கூட்டுக் குடிநீர் திட்ட பணிக்கு கீழ்க்கண்ட விபரப்படி ரூ.174 கோடிக்கு அரசு ஒப்புதல் வழங்கி பணிகள் நடைபெற்று வருகிறது.

| | | |
|---|---|---|
| NABARD | : | Rs.99.22 crore |
| MNP | : | Rs.59.91 crore |
| KfW | : | Rs.14.87 crore(For Padmanabhapuram Municipality) |
| Total | : | Rs.174.00 crore |

இதில் பத்மனாபபுரம் நகராட்சியினை உள்ளடக்கிய நிதி ஆதாரம் கீழ்க்கண்டவாறு ஆகும்.

| Sl.No. | Means of Finance | Amount (Rs. in Crores) |
|---|---|---|
| 1. | Loan from TNUDF under KfW assisted SMIF-TN-II-2 | 5.52 |
| 2. | Grant from PSGF under KfW assisted SMIF-TN-II-2 | 6.91 |
| 3. | ULB Contribution | 1.38 |
| 4 | Sub Total | 13.81 |
| 5. | Proportionate O & M cost for one year as per DPR | 1.06 |
| 6. | Total Project Cost | 14.87 |

மேற்படி நிர்வாக பொறியாளர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், நாகர்கோவில் அவர்களின் கடித எண். 23620/கோ. இரணியல்/இநிவஅ/2020/ நாள்.23.06.2020. மற்றும் 30.07.2020.– ன் படி மேற்கண்ட குடிநீர் திட்டம் தற்போதைய நிலவரப் படி ஒப்பந்தப்புள்ளி கூடுதல் தொகைக்கு ஒப்பந்தக்காரரால் கோரப்பட்டதாலும் GST மதிப்பீடு தயாரித்த பின்னர் அறிமுகப்படுத்தியதாலும் , சாலையோரத்தில் குழாய் பதிப்பதற்கான சாலை மறு சீரமைப்பு கட்டணம் மதிப்பீட்டை விட அதிகரித்ததாலும் பத்மனாபபுரம் நகராட்சிக்கு கூடுதல்

செலவு ரூ.972.00 இலட்சத்திற்கு மேலாக கீழ்க்கண்ட விபரப்படி மறு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| a | Tender Excess 6.60 % | : | Rs.92.00Lakh |
| b | GST @ 12% | : | Rs.178.00 Lakh |
| c | Additional cost involving works & restoration charges | : | Rs. 702.00 Lakh |
| | Total | : | Rs.972.00 Lakh |

எனவே மேற்கண்ட கூடுதல் மதிப்பீட்டிற்கு மேலாக பணி மேற்கொள்ள வேண்டியுள்ளதால்அதற்கான கூடுதல் நிதியினை பத்மனாபபுரம் நகராட்சி 2020–2021 IUDM/CGF நிதி ஒதுக்கீட்டிலிருந்து பெற்று செலுத்திடுமாறு கோரப்பட்டுள்ளது. பத்மனாபபுரம் நகராட்சி மிகவும் நிதி நலிந்த நகராட்சியாக திகழ்கின்றமையாய் நகராட்சியின் அன்றாட இன்றியமையாத பணிகளை மேற்கொள்ளவே போதிய ஆதாரம் இல்லாத நிலையில் மிகை செலவினத்திற்கான நகராட்சி தொகையினை ஏற்றெடுக்க வழிவகை ஏதும் இல்லை. எனவே இதனை சிறிப்பினமாக கருதி மொத்த நிதியினை 2020– 2021 ஆம் ஆண்டு IUDM/CGF திட்டத்தின் கீழ் மானியம் ஒதுக்கீடு செய்ய நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களுக்கு கருத்துரு அனுப்ப மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**மன்றத் தீர்மானம் எண்.1698**
அனுமதிக்கப்படுகிறது.

2)இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு வாகனம் எண். TN74P 9346-க்கு மராமத்து பணிகள் மேற்கொள்ள 09/09/2020 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் | தொகை ரூ. |
|---|---|---|
| 1 | அக்ஷயா மோட்டார்ஸ் உண்ணாமலைக்கடை | 32450/- |
| 2 | கணேஷ் மோட்டார்ஸ் நாகர்கோவில் | 31152/- |

மேற்படி வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வ.எண்.2-ல் உள்ள ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டினை விடக் குறைவாக உள்ளது. எனவே குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்த கணேஷ் மோட்டார்ஸ் நாகர்கோவில் நிறுவனத்திற்கு பொது சுகாதார அத்தியாவசியம் கருதி தனி அலுவலர் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு:-பொது சுகாதார நலன் (ம) அவசர அவசியம் கருதி தனி அலுவலர்/ஆணையர் முன் அனுமதி பெற்றுபணி உத்தரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண்.1256/2013/அ2)

**<u>மன்றத் தீர்மானம் எண்.1699</u>**

குறைந்த ஒப்பந்தப்புள்ளி M/s. கணேஷ் மோட்டார்ஸ், நாகர்கோவில் ரூ.**31152/–** அங்கீகரிக்கப்பட்டது.

3)இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் இயங்கும் வாகனம் எண். TN74D 4151 கழிவு நீர் வாகனத்துக்கு புதிய (Exide) மின்கலப்பெட்டி வாங்குவதற்கு ஆகும் உத்தேச செலவுத் தொகை ரூ.7500/-னை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்கவும் அவசர அவசியம் கருதி விலைப்புள்ளி கோரவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு:-பொது சுகாதார அவசர அவசியம் கருதி விலைப்புள்ளி கோரவும் உத்தேச செலவீனத்திற்கும் மன்ற அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 544/2009/அ2)

**<u>மன்றத் தீர்மானம் எண்.1700</u>**

அனுமதிக்கப்படுகிறது.

4)பத்மனாபபுரம் நகராட்சிக்குட்பட்ட 21 வார்டுகளின் திருத்தியமைக்கப்பட்ட வரைபடம் தயார் செய்ய விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட 3 நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளி வரப்பட்டுள்ளது.

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி | தொகை ரூ (வார்டு ஒன்றிற்கு) |
|---|---|---|
| 1, | Parthi Intotech,<br>5/5 Karuvampalayam<br>Tirupur. | 4050/- |
| 2. | DB Info Salvtions<br>95, Todhunter Nagar,<br>Saidapet. | 3850/- |
| 3. | Jothi Intotech<br>86A Sowripalayam<br>Coimbatore . | 4150/- |

அ.கு:- குறைந்த விலைப்புள்ளி வழங்கிய DB Info Solutions Saidapet-க்கு வேலை உத்தரவு வழங்கஆ;லாம்.

(ந.க.எண். 746/2020/TPI)

**<u>மன்றத் தீர்மானம் எண்.1701</u>**
குறைந்த விலைப்புள்ளி M/s DB Info Solutions,saidapet அங்கீகரிக்கப்படுகிறது.

**5)** இந்நகராட்சிக்கு தேவையான Toners- கள் வாங்க **04/09/2020** விலைப்புள்ளிகள் பெறப்பட்டதில் கீழ்காணும் விபரப்படி விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

1) Apple.Computers Thuckalay

| வ. எண். | டோனர்கள் விபரம் | எண்ணம் | விலை விபரம் ரூ. |
|---|---|---|---|
| 1 | Live Tech 88A Toners compatible | 1 | 700/- |
| 2 | 280A Toner Compatible | 1 | 1250/- |
| 3 | KYOCERA taskalter tonner (Original) | 1 | 4950/- |
| 2)Sam Computer- Kattathurai | | | |
| 1 | Toner 280A | 1 | 350/- |
| 2 | Toner 88A | 1 | 750/- |
| 3 | Toner 2201 | 1 | 5350/- |

மேற்படி வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகளில் வரிசை எண்.1-ல் காணும் Apple Computers தக்கலை நிறுவனத்தின் விலைப்புள்ளி குறைவாக உள்ளதை ஏற்று விநியோக உத்தரவு வழங்கலாம்.

அ.கு:- அவசர அவசியம் கருதி தனி அலுவலர் முன் அனுமதி பெற்று விநியோக உத்தரவு வழங்கியதை மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 1982/2018/அ1)

**<u>மன்றத் தீர்மானம் எண்.1702</u>**
குறைந்த விலைப்புள்ளி M/s Apple Computers Thuckalay அங்கீகரிக்கப்படுகிறது.

6)இந்நகராட்சி அலுவலக வளாகத்தில் உள்ள ஜென்செட் 10KVA மின் தடை ஏற்படும் பட்சத்தில் அலுவலக உபயோக பயன் பாட்டிற்காக மின்சாரம் தடை ஏற்படும் வேளையில் பயன்படுத்தப்பட்டு வருகிறது. மேற்படி 13.08.2020 அன்று மின்சாரம் தடை ஏற்பட்ட நேரத்தில் ஜென்செட் 10KVA பயன்படுத்தப்பட்ட

பொழுது எதிர்பாராத விதமாக பழுது ஏற்பட்டது. மேற்படி அலுவலக அவசர அவசியம் கருதி ஜென்செட் 10KVA ல் ஏற்பட்டுள்ள பழுதினை சரி செய்ய உத்தேச செலவினம் **ரூ.10000/-** ஆகும். அவசர அவசியம் கருதி பழுது பணியினை மேற்கொள்ள நேரடி விலைப்புள்ளிகள் பெற்று பணியினை மேற்கொள்ளவும் செலவினத்தினை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>மன்றத் தீர்மானம் எண்.1703</u>**
அனுமதிக்கப்பட்டது.

7)இந்நகராட்சி அலுவலக வளாகத்தில் உள்ள **10 KVA ஜென்செட்** பழுதடைந்த காரணத்தால் பழுது பணிகள் மேற்கொள்ளப்பட்டமைக்கு **திரு.சுப்பிரமணியம், சரவணா சவுண்ட் சர்வீஸ் , வீராணி , ஆளுர்** என்ற நிறுவனதாரரிடமிருந்து கீழ்க்கண்டவாறு விலைப்பட்டியல் வரப்பெற்றுள்ளது.

| **வ.எண்** | **பழுது பணிகள் மேற்கொள்ளப்பட்ட விபரம்** | **தொகை(ரூ)** |
|---|---|---|
| 1 | Diesel Tank Set | 2850/– |
| 2 | Dynamo Service | 1825/– |
| 3 | Air Filter | 645/– |
| 4 | Oil | 284/– |
| 5 | Engine Gas set Oil Banging set | 618/– |
| 6 | Labour Charges | 1500/– |
| | **Total** | **7722/–** |

மேற்கண்ட விபரப்படி உள்ள தொகை ரூ. 7722/- **ஐ திரு.சுப்பிரமணியம், சரவணா சவுண்ட் சர்வீஸ்** , **வீராணி** , **ஆளுர்** என்ற நிறுவனதாரருக்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>மன்றத் தீர்மானம் எண்.1704</u>**
அனுமதிக்கப்பட்டது.